வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | நாடகமும் அரங்கியலும் | புள்ளித்திட்டம் I |
|---|---|---|

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 5 | 21) 1 | 31) 4 |
| 2) 2 | 12) 2 | 22) 5 | 32) 3 |
| 3) 3 | 13) 4 | 23) 3 | 33) 3 |
| 4) 1 | 14) 3 | 24) 3 | 34) 2 |
| 5) 4 | 15) 1 | 25) 4 | 35) 2 |
| 6) 3 | 16) 4 | 26) 2 | 36) 6 |
| 7) 5 | 17) 4 | 27) 1 | 37) 5 |
| 8) 3 | 18) 5 | 28) 5 | 38) 1 |
| 9) 1 | 19) 1 | 29) 4 | 39) 4 |
| 10) 3 | 20) 3 | 30) 2 | 40) 1 |

The National e-learning Portal for The General Education

### பகுதி - II

01. I. ஆற்றுகைக் கலையின் பண்புகள்.

ஆற்றுவோரை மூலமாக கொண்டிருக்கும்
பார்ப்போரை உடன் எதிர் கொள்ளும்
ஆற்றுவோரிடமிருந்து கலையை பிரிக்க முடியாது
உடனடியான எதிர்விளைவுகள் இருக்கும்
ஆற்றுவோர் பார்ப்போர் என இரு சமூகம் காணப்படும்.

II. நடித்தல் - பாத்திரமொன்றினை திட்டமிட்டு, பயிற்சிக்குட்படுத்தி, உடல்சார் நுட்பங்களை பிரயோகித்து ஆள்மேற் கொள்ளலினூடாக வெளிப்படுத்துதல்.

ஆற்றுகை - போலச் செய்தல் அல்லாத, குறித்த பாத்திரம், அல்லது, சம்பவங்களை தன்னுணர்ச்சியுடன் சித்திரித்தல், எமது பாரம்பரிய அரங்குகளில் இம்முறையே காணப்படும்.

III. நாடகம், நடிப்பு, வேட உடை ஒப்பனை, ஒளி, ஒலி, இசை காட்சி….. என பல கலைகளின் கூட்டு வடிவம் என்பதனை வலியுறுத்துவதுடன், நாடகத்தில் இக்கலைகளெல்லாம் தமது தனித்துவங்களை இழந்து 'நாடகம்' என்ற தனிக்கலையையே உருவாக்குகின்றன. என்பதனை விபரித்திருத்தல்.

02. I. ஆற்றுவோர் தமது ஆற்றுகையை நிகழ்த்துவதற்கு தெரிந்து கொள்ளும், இடம், அரங்க வெளியாகும். அது கட்டடமாகவோ, வெற்றுத்தரையாகவோ இருக்கலாம். அவ்வெளி, ஆற்றுவோர் பார்ப்போர் உறவை, ஆற்றுகை முறையை அரங்க மூலங்களுடன் இணைந்த புரிதலை வெளிப்படுத்துகின்றது.

(3 புள்ளிகள்)

II. வழங்கப்பட்ட வெளிகளின் இயல்புகள், அவற்றின் ஆற்றுவோர் பார்ப்போர் உறவு, வெளியின் வடிவம், போன்றவற்றை இனங்கண்டு விடை அளித்திருத்தல் வேண்டும்.

**உதாரணமாக :-**

அ) :- **காமன் பொட்டல்** - சுற்றிவர பார்ப்போர் சமூகம் நிரந்தர அமைவிடத்தினை சூழ்ந்து இருக்கும், அதேவேளை ஆற்றுகை நகரும். பார்ப்போரும், நகர்வர், பார்ப்போர் ஆற்றுவோர் இரண்டறக் கலந்து நிற்பர்…….

ஆ) :- **வட்டக்களரி** – வட்டமாக அமைக்கப்பட்ட வெளி சற்று உயர்த்தப்பட்டிருக்கும், அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஆற்றுவோர் பார்ப்போர் வேறுபடுபவர், ஆனால் உறவு நெருக்கமாக இருக்கும்………

இ) :- **படச்சட்ட மேடை** - மூன்று பக்கமும் அடைக்கப்பட்டிருக்கும், ஒருபக்கமாக பார்ப்போரை எதிர்கொள்ளும், உயர்த்தப்பட்டிருக்கும், உறவு அந்நியப்பட்டிருக்கும், அரங்க மாயை அதிகமாகக்காணப்படும்.

(3X5=15 புள்ளிகள்)

03. நாடகத்தில் பாத்திரங்களுக் கிடையேயான ஊடாட்டம், கருத்து வெளிப்பாடுகள், பாத்திரப்பண்புகள், மோதுகை…….. என பலவிடயங்களையும் 'உரையாடல்' மூலமே விளங்கிக் கொள்ளுகின்றோம். நாடக வகைகளுக்கேற்ப உரையாடல்கள் வேறுபடுகின்றன.

I. யதார்த்த நாடகங்களில் உரையாடல்கள் இயல்பானதாக இருக்கும், பேச்சுவழக்கில் அமைந்திருக்கும், வாழ்வில் சாதாரணமாக உரையாடும் பேச்சோசை பயன்படும். அசைவுகளை விட உரையாடல் அதிக முக்கியத்துவத்தினைப் பெறும்.

II. இசை நாடகம் முழுக்க முழுக்க பாடலில் அமைந்திருக்கும். 'கதைப்பது' பாடல் மூலமாக, 'செயல்கள்' பாடல் மூலமாக, 'உணர்வு வெளிப்பாடுகளும்' பாடலுடன் தொடர்புபட்டிருக்கும். ஊட்டு வசனங்கள் மட்டுமே பயன்படும் இவ்வுரையாடல், செம்மையான செய்யுள், கவிதை வடிவத்தில் ஆக்கப்பட்டிருக்கும்.

III. வானொலி நாடகம், கேட்டலுக்குரியது. உரையாடலே பிரதான ஊடகம், கதை, பாத்திரம், பாத்திரபண்பு, சம்பவங்கள், செயல்கள், அனைத்தும் உரையாடல் மூலமாகவே வெளிப்படுத்தப்படும்.

(3X5=15 புள்ளிகள்)

04. I. அவலச்சுவை / ரஜடி – விதிசாபம், என்பவற்றின் ஆளுமைக்குட்பட்ட மனித வாழ்வின், அவலங்களை கிரேக்க ரஜடி வெளிப்படுத்துகின்றது. 'நலமார்ந்த ஒன்று பாழ்பட்டுப்போதல்' என்ற சிந்தனையின் வழி ரஜடி கூறப்படுகிறது. உயர் பண்புமிக்க பாத்திரங்களின் வீழ்ச்சியில், அல்லது அவர்களுக்கு ஏற்படும் இன்னலில் எழும், அச்சம், பரிவிரக்கம் தூண்டப்பெறும் நாடகங்களாக இருக்கும். இவை தொடர்பான எண்ணக் கருக்களை முன்வைத்தல்.

(6 புள்ளிகள்)

II. கிரேக்க ரஜடி நாடக ஆசிரியர்களின் பங்களிப்பினை எடுத்துக் கூறுதல்.

**உதாரணமாக :-**

அ) :- **ஏஸ்கிலஸ்**
- இரண்டாவது நடிகனை அறிமுகம் செய்தார்
- முக்கூட்டு நாடக தொகுதியை அறிமுகம் செய்தார்
- கிரேக்க நம்பிக்கைகளுக்கு சமகால பரிணாமம் அளித்தவர்
- முரண்பாட்டினூடாக கதையை நகர்த்தியவர்

ஆ) :- **சோபோகிளிஸ்**
- அவலச்சுவையை உச்சநிலைக்கு கொண்டு சென்றவர்
- மூன்றாவது நடிகனை அறிமுகம் செய்தார்.
- முக்கூட்டு முறைமையை கைவிட்டு, தனி அவல கட்டமைப்பை தோற்றுவித்தார்.
- தனிமனித பிரச்சனைகளை முதன்மைப்படுத்தி, மெல்லிய மனித உணர்வுகளுக்கு முக்கியம் அளித்தார்.

இ) :- **யூரிப்பிடீஸ்**
- அவலச்சுவையை யதார்த்தம் நோக்கி கொண்டு வந்தார்.
- தெய்வங்களை பயங்கர சக்தியாக கருதும் நிலையை மாற்றினார்
- 11 நடிகர்களை பயன்படுத்தினார்.
- பெண்பாத்திர சித்திரிப்பில் கூடிய கவனம் செலுத்தினார்.
- அரங்கப் பொறிகளை அதிகம் பயன்படுத்தினார்

(ஒவ்வொரு நாடக ஆசிரியர்களும் ராஜடியில் ஏற்படுத்திய மாற்றங்கள் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டிருத்தல் வேண்டும். என எதிர்பார்க்கப்படுகின்றது.)

(3X3=9 புள்ளிகள்)

05. I. மார்க்க
- உயர் மரபு எனக் கொள்ளப்படுவது
- இலக்கண விதிமுறைகளுக்குட்பட்டது.
- நாட்டிய சாஸ்திரம் - இதன் சிறப்பான வெளிப்பாடு
- உயர் சமூக சிந்தனை

தேசி
- பிரதேச தனித்துவங்களை வெளிப்படுத்தும் மரபு
- உதாரணமாக :- தமிழ் நாடு – தெருக்கூத்து, கேரளா – கதகளி
- இலக்கண விதிகளுக்குள் அடங்காதது
- பிரதேச தனித்துவங்களை கொண்டிருக்கும்

(5 புள்ளிகள்)

II)
- சாகுந்தலத்தின் நாட்டிய சாஸ்திர இலக்கண நிலைப்பட்ட, உயர் அரங்கின் பண்புகளை எடுத்துரைத்தல்-ரூபகம்,பெயர்க் காரணம்,அர்த்த பிரகிருதிகள்,சந்தி…
- அலங்காரரூபனின், கிராமிய பண்பு, சுதேசிய இயல்புகளை வெளிப்படுத்துதல்.-ஆடல் பாடல்,எடுத்துரைக்கும் பண்பு,மொழிப்பாவனை…

(2X5=10 புள்ளிகள்)

06. இப்பகுதியின் சிறு குறிப்புக்கள் ஒவ்வொன்றினதும் அடிப்படைகள், அவை பற்றிய எண்ணக்கருக்கள், பயன்பாடு பற்றி கூறி இருத்தல் வேண்டும்.